# ஒடிஸா ரயில் விபத்து: பலி 288-ஆக உயர்வு

## 1,100-க்கும் மேற்பட்டோர் காயம்

**பாலசோர், ஜூன் 3:** ஒடிஸாவின் பாலசோர் மாவட்டத்தில் கோரமண்டல் விரைவு ரயில் உள்பட 3 ரயில்கள் ஒன்றோடொன்று மோதிய விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 288-ஆக அதிகரித்த நிலையில், காயமடைந்தவர்கள் எண்ணிக்கை 1,100-ஐ தாண்டியது.

வெள்ளிக்கிழமை நேர்ந்த விபத்துக்கான காரணத்தைக் கண்டறிவதற்காக, உயர்நிலை விசாரணையை ரயில்வே தொடங்கியுள்ளது.

**நாட்டை உலுக்கிய கோர விபத்து:** சென்னை சென்ட்ரல் - மேற்கு வங்கத்தின் ஷாலிமார் இடையே இயக்கப்படும் கோரமண்டல் விரைவு ரயில், சென்னை நோக்கி வெள்ளிக்கிழமை வந்து கொண்டிருந்தது.

ஒடிஸாவின் பாலசோர் மாவட்டம், பஹாநகர் பஜார் ரயில் நிலையம் அருகே இரவு 6.50 மணியளவில் வந்தபோது, சரக்கு ரயில் நிறுத்தப்பட்டிருந்த தண்டவாளத்தில் கோரமண்டல் ரயில் நுழைந்தது. இதனால், சரக்கு ரயிலின் மீது மோதி, கோரமண்டல் ரயிலின் பெட்டிகள் தடம்புரண்டன. அவை, சரக்கு ரயில் மீதும், அருகில் இருந்த மற்றொரு தண்டவாளத்திலும் சிதறி விழுந்தன. அப்போது, அந்த தண்டவாளத்தில் எதிர்த்திசையில் வந்த பெங்களூரு-ஹௌரா விரைவு ரயில், அந்தப் பெட்டிகள் மீது மோதி தடம்புரண்டதாகத் தெரியவந்துள்ளது.

**போர்க்களம் போல் மாறிய நிகழ்விடம்:** இரு விரைவு ரயில்களும் வேகமாக பயணித்த நிலையில், இந்த விபத்தால் அப்பகுதியே அதிர்ந்தது. மொத்தம் 17 பெட்டிகள் தடம்புரண்டு, ஒன்றன் மீது ஒன்று விழுந்து சிதைந்தன; தண்டவாளங்களும் பெயர்ந்தன.



ஒடிஸா மாநிலத்தில் கோரமண்டல் விரைவு ரயில், பெங்களூரு-ஹௌரா விரைவு ரயில், சரக்கு ரயில் ஆகியவை மோதி விபத்துக்குள்ளான இடத்தில் சனிக்கிழமை நடைபெற்ற மீட்புப் பணி.

சில நிமிஷங்களுக்குள் நேர்ந்த இந்தக் கோர சம்பவத்தில், ஏராளமான பயணிகள் இடிபாடுகளில் சிக்கினர். அவர்களின் ஓலத்தால், அந்த இடமே போர்க்களம் போல மாறியது.

இரு ரயில்களிலும் மொத்தம் 2,200-க்கும் மேற்பட்ட முன்பதிவு பயணிகள் இருந்தனர். முன்பதிவில்லாப் பெட்டிகளிலும் ஏராளமான பயணிகள் இருந்தனர். இவர்களில் பெரும்பாலானோர், தமிழகம் மற்றும் கேரளத்துக்கு செல்லும் வெளி மாநிலத் தொழிலாளர்களாவர்.

**முடுக்கிவிடப்பட்ட மீட்புப் பணி:** விபத்து குறித்து தகவல் கிடைத்ததும் மீட்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. தேசியப் பேரிடர் மீட்புப் படையினர் (என்டிஆர்எஃப்), ஒடிஸா மாநில பேரிடர் விரைவு நடவடிக்கை படையினர் (ஒடிஆர்எஃப்), தீயணைப்புப் படையினர் என சுமார் 1,200 பேர் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இரவு நேரம் என்பதால், மீட்புப் பணிகள் சவாலாக இருந்தன. சுமார் 200 ஆம்புலன்ஸ்கள், 50 பேருந்துகள், 45 நடமாடும் மருத்துவக் குழுக்களும் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டன.

வெட்டும் இயந்திரங்கள் உதவியுடன், பெட்டிகளில் சிக்கியிருந்தவர்கள் மீட்கப்பட்டு, பாலசோர் மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். உயிரிழந்தோரின் சடலங்களும் மீட்கப்பட்டன.

மீட்புப் பணியில் ராணுவம், விமானப் படையும் களமிறங்கியுள்ளன.

**பலி எண்ணிக்கை அதிகரிப்பு:** சனிக்கிழமை நிலவரப்படி, விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 288-ஆக அதிகரித்தது. காயமடைந்தோர் எண்ணிக்கை 1,175-ஆக அதிகரித்தது. அவர்களில் 793 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின் வீடு திரும்பினர். 382 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று ரயில்வே அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விபத்து நிகழ்ந்த இடத்தில் 500 தொழிலாளர்களுடன் மறுசீரமைப்புப் பணிகள் முழுவீச்சில் தொடங்கப்பட்டுள்ளதாக ரயில்வே செய்தித் தொடர்பாளர் அமிதாப் சர்மா தெரிவித்தார்.

**மருத்துவமனைகளில்...:** ரயில் விபத்தில் காயமடைந்தவர்களுக்கு பாலசோர், கட்டாக் மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதனால், இரு மருத்துவமனைகளும் நிரம்பி வழிகின்றன.

உயிரிழந்தவர்களின் சடலங்களால், பாலசோர் மருத்துவமனையின் பிணவறையில் சடலங்கள் குவிந்துள்ளன. சடலங்களை அடையாளம் காணும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதனிடையே, சம்பவ இடத்தை ஒடிஸா முதல்வர் நவீன் பட்நாயக் பார்வையிட்டார். விபத்து சம்பவத்துக்கு இரங்கல் தெரிவித்து, ஒடிஸா அரசு சார்பில் சனிக்கிழமை துக்கம் அனுசரிக்கப்பட்டது.



விபத்து நடந்த பகுதிக்குச் சென்று அதிகாரிகள், மீட்புக் குழுவினரிடம் விவரங்களைக் கேட்டறிந்த பிரதமர் நரேந்திர மோடி.

## பிரதமர் மோடி நேரில் ஆய்வு

### 'ரயில் விபத்துக்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை'

**பாலசோர், ஜூன் 3:** 'ஒடிஸா ரயில் விபத்துக்கு காரணமானவர்களாகக் கண்டறியப்படுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்' என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்தார்.

சென்னையை நோக்கி வந்த கோரமண்டல் விரைவு ரயில் உள்பட 3 ரயில்கள் மோதி கோர விபத்துக்கு உள்ளான ஒடிஸா மாநிலம் பாலசோர் மாவட்டம் பஹாநகர் பகுதிக்கு பிரதமர் மோடி சனிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: இந்தத் துயர சம்பவத்தின் வேதனையை விவரிக்க வார்த்தைகள் இல்லை. இந்த வலியிலிருந்து மீண்டு வர இறைவன் நமக்கு பலத்தைத் தரவேண்டும்.

விபத்தில் காயமடைந்தவர்களுக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படும். விபத்து மீட்புப் பணியில் இரவு முழுவதும் உதவிய உள்ளூர் மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கோர விபத்துக்கு காரணமானவர்களாக கண்டறியப்படுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். நடவடிக்கையிலிருந்து யாரும் தப்ப முடியாது என்றார்.

ரயில் விபத்து மற்றும் மீட்புப் பணி நிலவரம் குறித்து பேரிடர் மேலாண்மை அதிகாரிகள் பிரதமருக்கு விவரித்தனர்.

விபத்து நடந்த பகுதியிலிருந்தபடி, மத்திய அமைச்சரவைச் செயலர் மற்றும் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஆகியோரை கைப்பேசி மூலம் பிரதமர் தொடர்புகொண்டு, ரயில் விபத்தில் காயமடைந்த பயணிகள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருமாறு அறிவுறுத்தியதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக, ரயில் விபத்து குறித்து தில்லியில் உயர்நிலை ஆலோசனைக் கூட்டத்தை பிரதமர் நடத்தினார்.

# இந்திய ரயில்வே வரலாற்றில் மிக மோசமான விபத்துகள்

**புது தில்லி, ஜூன் 3:** ஒடிஸா ரயில் விபத்து இந்திய ரயில்வே வரலாற்றிலேயே மிக மோசமான விபத்துகளில் ஒன்று என்பது புள்ளி விவரங்கள் மூலமாக தெரியவந்துள்ளது.

பெங்களூரிலிருந்து ஹௌரா நோக்கிச் சென்ற ஹௌரா விரைவு ரயிலும், மேற்கு வங்க மாநிலம் ஷாலிமாரிலிருந்து சென்னை சென்ட்ரல் நோக்கி வந்த கோரமண்டல் விரைவு ரயிலும், ரயில் பாதையில் நிறுத்தப்பட்டிருந்த சரக்கு ரயில் மீது வெள்ளிக்கிழமை இரவு மோதி விபத்துக்குள்ளானதில் 288 பயணிகள் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். அந்த வகையில், இந்தியாவில் இது வரை நடைபெற்ற மோசமான ரயில் விபத்துகளில் ஒன்றாக இந்த விபத்து மாறியுள்ளது.

இந்தியாவில் இதற்கு முன்பு நடைபெற்ற மோசமான ரயில் விபத்துகளின் விவரம்:

**1964 டிசம்பர் 23:** ராமேசுவரம் புயலில் பாம்பன்-தனுஷ்கோடி பயணிகள் ரயில் அடித்துச் செல்லப்பட்டதில் 126 பயணிகள் உயிரிழந்தனர்.

**1981 ஜூன் 6:** பிகாரில் பாக்மதி ஆற்றில் ரயில் கவிழ்ந்த விபத்தில் 750-க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இதுவே, இந்தியாவில் நடைபெற்ற மிக மோசமான ரயில் விபத்தாகக் கருதப்படுகிறது.

**1995 ஆகஸ்ட் 20:** உத்தர பிரதேச மாநிலம் ஃபிரோசாபாத் அருகே புருஷோத்தம் விரைவு ரயில், ரயில் பாதையில் நின்றுகொண்டிருந்த விரைவு ரயில் மீது மோதி விபத்துக்குள்ளானதில் 305 பேர் உயிரிழந்தனர்.

**1998 நவம்பர் 26:** பஞ்சாப் மாநிலம் கன்னா பகுதியில் ரயில் பாதையில் தடம்புரண்ட ஃபிரான்டியர் பொற்கோயில் ரயிலின் 3 பெட்டிகள் மீது ஜம்மு தாவி சியல்டா விரைவு ரயில் மோதி விபத்துக்குள்ளானதில் 212 பேர் உயிரிழந்தனர்.

**1999 ஆகஸ்ட் 12:** வடகிழக்கு ரயில்வே மண்டலத்துக்கு உட்பட்ட கட்டிஹார் மண்டலத்தில் ரயில் பாதையில் நின்றுகொண்டிருந்த அவ்தா அஸ்ஸாம் விரைவு ரயில் மீது பிரம்மபுத்ரா ரயில் மோதி விபத்துக்குள்ளானதில் ஏராளமான ராணுவ, எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்கள் உள்பட 285 பேர் உயிரிழந்தனர். 300 பேர் காயமடைந்தனர்.

**2002 செப்டம்பர் 9:** பிகாரின் ரஃபிகஞ்ச் பகுதியில் தாவ் ஆற்றுப் பாலத்தில் தடம்புரண்டிருந்த ரயில் பெட்டிகள் மீது ரஃபிகஞ்ச் ரயில் மோதி விபத்துக்குள்ளானதில் 140 பயணிகள் உயிரிழந்தனர்.

**2010 மே 28:** மேற்கு வங்க மாநிலம் ஜார்கிராம் அருகே ரயில் பாதையில் தடம்புரண்ட ஞானேஸ்வரி ரயில் மீது அந்த வழியாக வந்த சரக்கு ரயில் மோதிய விபத்தில் 148 பயணிகள் உயிரிழந்தனர்.

**2016 நவம்பர் 20:** உத்தர பிரதேச மாநிலம் கான்பூரிலிருந்து 60 கிலோ மீட்டர் தொலைவில் ரயில் பாதையில் தடம்புரண்டிருந்த இந்தூர்-ராஜேந்திரா நகர் விரைவு ரயில் பெட்டிகள் மீது புக்ரியான் ரயில் மோதி விபத்துக்குள்ளானதில் 150 பேர் உயிரிழந்தனர். 260 பேர் காயமடைந்தனர்.

# தமிழகத்தைச் சேர்ந்தவர்களின் நிலை என்ன?

## முதல்வர் ஸ்டாலினிடம் அமைச்சர்கள் தகவல்

**சென்னை, ஜூன் 3:** ஒடிஸா ரயில் விபத்தில் பலியாகி இதுவரை அடையாளம் காணப்பட்ட 100 பேரில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் இல்லை.

இந்தத் தகவலை ஒடிஸா சென்றுள்ள அமைச்சர்கள், முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் தெரிவித்தனர்.

ஒடிஸா ரயில் விபத்து தொடர்பாக, தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சனிக்கிழமை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

ரயில் விபத்து நடந்த பகுதியில் நடைபெற்று வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை விரைவுபடுத்த அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், எஸ்.எஸ். சிவசங்கர் மற்றும் அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் ஒடிஸா சென்றுள்ளனர்.

தலைமைச் செயலகத்தில் நடந்த ஆலோசனையின்போது, அமைச்சர்கள்-அதிகாரிகள் கொண்ட குழுவினருடன் முதல்வர் ஸ்டாலின் காணொலி வழியாக ஆலோசனை நடத்தினார்.

அப்போது, ரயில் விபத்தில் பாதிக்கப்பட்டுள்ளோர் குறித்தும், மீட்புப் பணிகளின் நிலவரங்கள் பற்றியும் அவர் கேட்டறிந்ததாக தமிழக அரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, அரசு வெளியிட்ட செய்தி: காணொலி வழியாக நடந்த ஆலோசனையின்போது, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார். அப்போது, பாலசோர் அரசு மருத்துவமனைக்குச் சென்று விபத்தால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களைப் பார்த்ததாகவும், மருத்துவமனையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த யாரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

**விவரங்களைச் சேகரிக்கும் பணி:** ஒடிஸா மாநிலம் கட்டாக்கில் உள்ள எஸ்.வி.பி. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களின் விவரங்களைச் சேகரித்து வருவதாகவும், இப்போது வரை அந்த மருத்துவமனையில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எவரும் இல்லை எனத் தெரிய வந்துள்ளதாகவும் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.



ஒடிஸா சென்றுள்ள தமிழகக் குழுவுடன் சனிக்கிழமை சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி மூலம் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில், ரயில் விபத்து மீட்புப் பணி நிலவரம், காயமடைந்த தமிழக பயணிகளின் விவரம் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் விளக்கிக் கூறிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலர் பணீந்திர ரெட்டி.

பாலசோர் நகரத்தில் உள்ள 4 இடங்களில் விபத்தில் இறந்தவர்களில் 237 பேரின் உடல்கள் வைக்கப்பட்டுள்ளன. இப்போது வரை அடையாளம் காணப்பட்டுள்ள சுமார் 100 சடலங்களில், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எவரும் இல்லை என அங்குள்ள மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாக முதல்வரிடம் தமிழகக் குழுவினர் தெரிவித்தனர்.

தெற்கு ரயில்வே பயணிகளின் முன்பதிவுப் பட்டியல்படி, விபத்தில் சிக்கிய ரயில்களில் பயணம் செய்தவர்களின் விவரங்களை அவர்களது உறவினர்களிடம் சரிபார்க்கும் பணி இப்போது நடந்து வருகிறது.

**பயணிகள் பாதுகாப்பு:** ஒடிஸா சென்றுள்ள தமிழக அமைச்சர்கள், அதிகாரிகள் குழுவினர் மேலும் சில நாள்கள் அங்கே தங்கியிருந்து தமிழகப் பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக நமது மாநிலம் வந்து சேருவதை உறுதி செய்ய வேண்டுமென முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

தலைமைச் செயலகத்தில் நடந்த கூட்டத்தில், தலைமைச் செயலர் வெ.இறையன்பு, நிதித் துறை முதன்மைச் செயலர் த.உதயச்சந்திரன், முதல்வரின் செயலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### ஒடிஸா முதல்வருடன் சந்திப்பு

ரயில் விபத்து தொடர்பாக, ஒடிஸா முதல்வர் நவீன் பட்நாயக்கை, தமிழக அமைச்சர்கள், அதிகாரிகள் குழுவினர் சந்தித்துப் பேசினர். இது குறித்து, மாநில அரசு வெளியிட்ட செய்தி:

ரயில் விபத்தில் தமிழர்கள் யாரேனும் சிக்கியுள்ளார்களா என்பதை அறியவும், அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யவும் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், எஸ்.எஸ்.சிவசங்கர், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் குமார் ஜயந்த், பணீந்திர ரெட்டி, அர்ச்சனா பட்நாயக் ஆகியோர் ஒடிஸாவில் முகாமிட்டுள்ளனர்.

அவர்கள் ஒடிஸா மாநில முதல்வர் நவீன் பட்நாயக்கை சனிக்கிழமை மாலை சந்தித்துப் பேசினர். அப்போது, தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளின் பாதுகாப்பு, மீட்புப் பணிகள் மற்றும் மருத்துவ உதவிகள் குறித்து கலந்துரையாடியதாக தமிழக அரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'கவச்' விபத்து தடுப்பு அமைப்பு நிறுவப்படவில்லை

**புது தில்லி, ஜூன் 3:** விபத்துகளைத் தடுப்பதற்காக, ரயில் வழித்தடங்களில் 'கவச்' எனும் அதிநவீன தானியங்கி தொழில்நுட்ப அமைப்பை நிறுவும் நடைமுறையை ரயில்வே மேற்கொண்டு வருகிறது.

ஆனால், ஒடிஸாவில் ரயில் விபத்து நேரிட்ட வழித்தடத்தில் இந்த அமைப்புமுறை இல்லை என்று ரயில்வே தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**'கவச்' என்றால் என்ன?:** ரயில்களின் இயக்கத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, உள்நாட்டில் உருவாக்கப்பட்ட தானியங்கி தொழில்நுட்ப அமைப்புமுறையே 'கவச்' ஆகும். ரயில்வே அமைச்சகத்தின்கீழ் செயல்படும் ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தர அமைப்பு (ஆர்டிஎஸ்ஓ), இதர 3 இந்திய நிறுவனங்களுடன் இணைந்து இந்த அமைப்புமுறையை உருவாக்கியது. ஒடிஸா ரயில் விபத்துக்குப் பின், இந்த தொழில்நுட்பத்தின் தேவை அதிக கவனம் பெற்றுள்ளது.

**எப்படி பாதுகாக்கும்?:** ரயிலின் ஓட்டுநர், சிக்னலை மீறிச் செல்வதே பெரும்பாலான விபத்துகளுக்கு காரணமாக உள்ளது. அவ்வாறு, ரயிலின் ஓட்டுநர் சிக்னலை மீறிச் சென்றால், 'கவச்' தொழில்நுட்பம் எச்சரிக்கை செய்யும். அதிவேகமாக ரயிலை இயக்கினாலும் எச்சரிக்கை செய்யும். அடர் பனிமூட்டம் போன்ற மோசமான வானிலைகளின் போது, ரயில்களின் பாதுகாப்பான இயக்கத்துக்கு உதவும்.

**ரயிலை தானாக நிறுத்தும்:** ஒரே தண்டவாளத்தில் குறிப்பிட்ட இடைவெளியில் இரு ரயில்கள் எதிரெதிர் திசையில் வரும் பட்சத்தில், 'கவச்' தொழில்நுட்பம் ரயிலின் ஓட்டுநருக்கு எச்சரிக்கை செய்யும். அவர் பிரேக் இயக்கத் தவறினால், பிரேக் அமைப்புமுறையை தானே ரயிலின் வேகத்தைக் கட்டுப்படுத்தி, ரயிலை நிறுத்திவிடும்.

தென் மத்திய ரயில்வேயில் லிங்கம்பள்ளி-விகாராபாத்-வாடி மற்றும் விகாராபாத்-பீதர் ஆகிய வழித்தடங்களில் கவச் தொழில்நுட்பத்தின் சோதனை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

இதையடுத்து, இதர ரயில் வழித்தடங்களிலும் இந்த அமைப்புமுறையை நிறுவும் நடைமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2024-ஆம் ஆண்டுக்குள் தில்லி-ஹௌரா, தில்லி-மும்பை வழித்தடங்களில் இதை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இதில் கிடைக்கும் அனுபவத்தின் அடிப்படையில், கவச் தொழில்நுட்பப் பயன்பாடு விரிவுபடுத்தப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# இந்திய ராணுவம் சார்பில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பேரணி



உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி, இந்திய ராணுவத்தின் சார்பில் சென்னை தீவுத்திடலில் சனிக்கிழமை நடைபெற்ற விழிப்புணர்வுப் பேரணி.

**சென்னை, ஜூன் 3:** சென்னையில் இந்திய ராணுவம் சார்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஊக்குவிக்கும் விதமாக விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

தென் மண்டல ராணுவத் தலைமை தளபதி லெப்டினென்ட் ஜெனரல் கே.எஸ். பிரார் பேரணியைக் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்தப் பேரணியில் மின்சார இருசக்கர வாகனம், மிதி வண்டி மற்றும் குதிரை சவாரி மூலம் சென்ற ராணுவத்தினர் சுற்றுச்சூழலை பாதுகாக்க மரம் வளர்ப்பு அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

பேரணி முடிவில் லெப்டினென்ட் ஜெனரல் கே.எஸ்.பிரார், மரக்கன்றுகளை நட்டார். சென்னை தீவுத் திடல் மைதானத்தில் இருந்து தொடங்கிய விழிப்புணர்வுப் பேரணி நேப்பியர் பாலம், அண்ணா சாலை, சிவானந்த சாலை வழியாகச் சென்று மீண்டும் தீவுத்திடலை அடைந்தது.



# யு.பி.எஸ்.சி. தேர்வுக்கான இலவச கருத்தரங்கம்

**சென்னை, ஜூன் 3:** யு.பி.எஸ்.சி., டி.என்.பி.எஸ்.சி. தேர்வுகளுக்கான இலவச பயிற்சி கருத்தரங்கம் ஜூன் 10, 11 ஆகிய தேதிகளில் தாம்பரம் இவா ஸ்டாலின் அகாதெமியில் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து அந்த அகாதெமி சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை:

யு.பி.எஸ்.சி., டி.என்.பி.எஸ்.சி.-இன் முதல்நிலை, முதன்மைத் தேர்வுகள் குறித்து கருத்தரங்கில் விவரிக்கப்படும். மேலும் யு.பி.எஸ்.சி. முதன்மைத் தேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய விருப்பப் பாடங்கள் பற்றி அனுபவமிக்க பயிற்சியாளர்களால் எடுத்துரைக்கப்படும். மே 28-இல் நடைபெற்ற ய.பி.எஸ்.சி முதல்நிலைத் தேர்வின் விடைக்குறிப்புகள் வழங்கப்படும்.

டி.என்.பி.எஸ்.சி. தேர்வில் வெற்றி பெற சிறப்பான வழிகாட்டுதல் வழங்கப்படும். இவ்விரு போட்டித் தேர்வுகளுக்கு முதல்முறையாக தயாராகும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் 86789 69915, 99403 32851 ஆகிய எண்களுக்குத் தொடர்புகொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY

# இந்திய சர்ஃபிங் ஓபன்: தமிழகத்தின் கிஷோர், கமலி மூர்த்தி சாம்பியன்



இந்திய சர்ஃபிங் ஓபன் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற தமிழக வீரர் கிஷோர் குமார், கமலி மூர்த்தி.

மங்களூரு, ஜூன் 3: இந்திய சர்ஃபிங் ஓபன் போட்டியில் ஆடவர் பிரிவில் தமிழகத்தின் கிஷோர் குமாரும், மகளிர் பிரிவில் கமலி மூர்த்தியும் இரட்டை சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினர்.

2024 பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதிச் சுற்றாக கர்நாடக மாநிலம் மங்களூரு சஷித்திலு கடற்கரையில் இந்திய சர்ஃபிங் ஓபன் போட்டிகள் ஜூன் 1 முதல் 3-ஆம் தேதி வரை நடைபெற்றன. போட்டியின் இறுதி நாளான சனிக்கிழமை ஆடவர், மகளிர் ஓபன், 16 வயதுக்குள்பட்டோர் பிரிவுகளில் இறுதிச் சுற்று ஆட்டங்கள் நடைபெற்றன.

ஆடவர் ஓபனில் தமிழக வீரர் கிஷோர் குமார் முதலிடத்துடன் ரூ.50,000 ரொக்கப் பரிசை வென்றார். ஸ்ரீ காந்த், பி. சூர்யமா அடுத்த இடங்களைக் கைப்பற்றினர்.

மகளிர் பிரிவில் தமிழகத்தின் கமலி மூர்த்தி முதலிடத்துடன் ரூ.30,000 ரொக்கம் வென்றார். சுகர், சின்சனா அடுத்த இடங்களைக் கைப்பற்றினர். 16 வயது ஆடவர் பிரிவில் கிஷோர் குமார், தயின் அருண், பி. ஹரிஷ் ஆகியோரும், மகளிர் பிரிவில் கமலி, தனிஷ்கா, சான்வி ஆகியோர் முதல் மூன்று இடங்களை வென்றனர்.

# துருக்கி அதிபராக எர்டோகன் 3-ஆவது முறையாக பொறுப்பேற்பு

அங்காரா, ஜூன் 3: துருக்கியின் அதிபராக எர்டோகன் 3-வது முறையாக சனிக்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார்.

துருக்கி அதிபர் தேர்தல் கடந்த மாதம் 14-ஆம் தேதி நடைபெற்றது. அதில் யாருக்கும் 50 சதவீதத்துக்கு மேல் வாக்குகள் கிடைக்காததால் 2-ஆம் கட்ட தேர்தல் மே 28-ஆம் தேதி நடைபெற்றது.

இதில் எர்டோகனுக்கு 52.18 சதவீத வாக்குகள் கிடைத்தன. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட கெமால் கிளிச்தரோக்லுவுக்கு 47.82 சதவீத வாக்குகள் கிடைத்தன.

இந்தத் தேர்தல் முடிவுகள் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டன.

அதையடுத்து, 3-ஆவது முறையாக அவர் அதிபர் பொறுப்பை ஏற்றார். ஏற்கெனவே 20 ஆண்டுகள் துருக்கியின் அதிபராகப் பொறுப்பு வகித்துள்ள 69 வயது எர்டோகன், இந்தப் பதவியேற்பின் மூலம் தனது மொத்த பதவிக் காலத்தை கால் நூற்றாண்டாக நீட்டிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் அரசு இயந்திரங்களை முழுமையாகப் பயன்படுத்தி எர்டோகன் முறைகேட்டில் ஈடுபட்டதாக எதிர்க் கூட்டணி வேட்பாளர் கெமால் கிளிச்தரோக்லு குற்றம் சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது.



எர்டோகன்

# பெரியார் வன விலங்கு சரணாலயம் பாதிப்பு ஏற்படுத்துமா?

கே.விஜயபாஸ்கர்

**ஈரோடு, ஜூன் 3:** அந்தியூர் வனப் பகுதியில் வன விலங்கு சரணாலயம் அமைக்கப்படும் முன்பு அந்த மலைப் பகுதி மக்களின் அச்சத்தை முழுமையாகத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், வெள்ளோடு பறவைகள் சரணாலயம் ஆகியவை உள்ளன. இந்தச் சூழலில் கடந்த மார்ச் 20-இல் தாக்கல் செய்யப்பட்ட தமிழக நிதிநிலை அறிக்கையில் ஈரோடு மாவட்டத்தில் புதிதாக பெரியார் வன விலங்கு சரணாலயம் அமைக்கப்படும் என்று அறிவிப்பு வெளியானது. அதன்படி, கோபி, அந்தியூர் வட்டங்களில் உள்ள 80,567 ஹெக்டேர் வனப் பகுதியில் சரணாலயம் அமையவுள்ளது. இது தமிழகத்தின் 18-ஆவது வன விலங்கு சரணாலயம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரோடு மாவட்டம், அதிக அளவில் வனப் பகுதியைக் கொண்டது. இங்கு ஏராளமான யானைகள், புலிகள், சிறுத்தைகள், மான்கள், பறவை இனங்கள், விலை உயர்ந்த மரங்கள், மூலிகை செடி, கொடிகள் உள்ளன. வனப் பகுதியை ஒட்டிய பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மக்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பை பிரதான தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். வனப் பகுதிகளில் குளம், ஏரி, குட்டைகள் உள்ளிட்ட நீர்நிலைகளும் அதிக அளவில் காணப்படுகின்றன.

**புலிகள் வழித்தடம்:** ஈரோடு வனக் கோட்டத்தில் உள்ள அந்தியூர், பர்கூர், சென்னம்பட்டி வனச் சரக பகுதிகளை முழுமையாகவும், அந்தியூர் வனப் பகுதியை ஒட்டியுள்ள கோபி வட்டத்துக்கு உள்பட்ட பகுதிகளையும் இணைத்து புதிய சரணாலயம் அமைக்கப்படுகிறது. எந்தெந்தப் பகுதிகளை இணைப்பது என்பது குறித்து வனத் துறை உயர் அதிகாரிகள் நேரில் விரைவில் ஆய்வு செய்ய உள்ளனர்.

மேற்குத் தொடர்ச்சி மலையில் கர்நாடக மாநிலத்தில் இருந்து ஈரோடு மாவட்டம், அந்தியூர் வனப் பகுதி வழியாக சத்தியமங்கலம் காப்பகப் பகுதிக்கு புலிகள் இடம் பெயர்வது கண்டறியப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இதுபோல 9 புலிகள் அந்தியூர் வனப் பகுதியில் நடமாடின. இது வனத் துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராவில் பதிவானது. புலிகள் நடமாட்டத்தில் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்கும் வகையில் புதிய வன விலங்கு சரணாலயம் அமையும். இந்த வன விலங்கு சரணாலயத்தில் சிறுத்தைகள், காட்டுப் பன்றிகள், மான்கள் உள்ளிட்டவையும் அதிகம் வசிக்கின்றன.

அதுமட்டுமின்றி 21 வகையான பாலூட்டிகள், 136 வகையான பறவைகள் மற்றும் 118 வகையான பட்டாம்பூச்சிகள் உள்ளன. மனித-விலங்கு மோதலைத் தடுக்கும் வகையில் சரணாலயம் அமையும். இந்த வன விலங்கு சரணாலயம் அந்தியூர், பர்கூர், தட்டக்கரை, சென்னம்பட்டி ஆகிய காப்புக்காடு பகுதிகளில் மட்டுமே அமையும். அங்கு வசிக்கும் மக்களுக்கு புதிய கட்டுப்பாடுகள் ஏதும் இருக்காது என வனத் துறையினர் கூறுகின்றனர்.

**வன உரிமைச் சட்டத்தை அமல்படுத்தப்பட வேண்டும்:** இதுகுறித்து தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்க மாநில நிர்வாகி வி.பி.குணசேகரன் கூறியதாவது: காடுகளை நம்பி வாழ்பவர்கள் பழங்குடியினர். இவர்கள் வாழும் இடங்களை, பயன்படுத்தும் இடங்களை இவர்களுக்கே உரிமை அளிக்கும் வகையில் பட்டியல் பழங்குடியினர் மற்றும் பாரம்பரிய வன வாழ் மக்கள் (வன உரிமைகள் அங்கீகரிக்கும்) சட்டம் 2006-ஐ மத்திய அரசு கொண்டு வந்தது. சுருக்கமாக இது வன உரிமைச் சட்டம் என்று அழைக்கப்படுகிறது. இந்தச் சட்டத்தின்படி 2005 டிசம்பர் 13 ஆம் தேதிக்கு முன்பாக காடுகளில் வசிக்கும், விவசாயம் செய்துவரும் பழங்குடியினருக்கு அந்த நிலங்களை பட்டாவாக வழங்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், ஈரோடு மாவட்ட வனப் பகுதிகளில் இது வரை மக்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை.



அந்தியூர்-மைசூர் சாலையில் வரட்டுப்பள்ளம் அணை அருகே வனப் பகுதியில் சாலையைக் கடந்து செல்லும் யானை (கோப்புப் படம்).

பழங்குடிகள் மற்றும் பழங்குடிகள் அல்லாத, வனம் சார்ந்த சமூகங்களின் உரிமைகளை அரசாங்கம் பதிவு செய்ய வேண்டுமென வன உரிமைச் சட்டம் கூறுகிறது. உரிமை என்பதில் வனம் சார்ந்த நிலத்தில் மேற்கொள்ளப்படும் உழவு, மரங்கள் நீங்கலாக பிற வன உற்பத்திப் பொருள்களைத் திரட்டுவது மற்றும் நீர்நிலைகளைப் பயன்படுத்திக் கொள்வது போன்றவை அடங்கும்.

வனம் மீதான உரிமை வனத்தில் குடியிருக்கும் அனைத்து மக்களும் உண்டு என இச்சட்டம் கூறுகிறது. இதற்காக கிராம சபைகள் அமைக்கப்பட வேண்டும் என்றும், கிராம சபைகளுக்கு தகவல் தெரிவிக்காமல் வனப் பகுதி மக்களைப் பாதிக்கும் எந்தச் செயலையும் அரசு செய்யக் கூடாது என்றும் கூறுகிறது. ஆனால், வன விலங்கு சரணாலயம் அமைப்பது குறித்து இது வரை கருத்து கேட்கப்படவில்லை.

வனங்களில் அணை கட்டியும், சுரங்கம் அமைத்தும் இயற்கை வளங்களைச் சுரண்டியது மத்திய, மாநில அரசுகள்தான். பழங்குடியினர் இருக்கும் இடங்களில்தான் வன விலங்குகள் பாதுகாப்பாக இருக்கின்றன. வன உரிமைச் சட்டம் வருவதற்கு முன்பு பழங்குடியினருக்குப் பல அநீதிகள் நடந்திருக்கின்றன. காப்புக் காடுகள் என்ற பெயரில் அவர்கள் வசிக்கும் வீடுகளில் இருந்து துரத்தப்பட்டிருக்கின்றனர். காய்ந்த சுள்ளிகளைச் சேகரிக்க வனத்துக்குள் செல்லும் பழங்குடியினரை வனத் துறையினர் விரட்டி அடிக்கின்றனர். காடுகளைவிட்டுப் பழங்குடியினர் வெளியேற்றம் என்பது கடந்த 30 ஆண்டுகளாகத்தான் அதிகம் நடந்துவருகிறது.

பவானிசாகர் அணை அருகில் தெங்குமரஹாடா என்ற கிராமம் உள்ளது. இந்தக் கிராமத்தைச் சுற்றி 20 கி.மீ. சுற்றளவுக்கு காடுகள்தான் இருக்கும். 200 ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பகுதியில் சில கிராமங்கள் இருந்தன. ஆனால், காப்புக் காடுகள் என்ற காரணங்களுக்காக 1980-க்குப் பிறகு அங்கிருந்த பழங்குடியின கிராமங்கள் காலி செய்யப்பட்டன. தற்போது ஒரு கிராமம்கூட அங்கு இல்லை.

அதேபோல முதுமலை புலிகள் காப்பகப் பகுதியில் இருந்த பழங்குடியினர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். குமுளி வனப் பகுதியில் முதுவர் என்ற பழங்குடியின கிராமம் இருந்தது. அந்தக் கிராமம் இப்போது இல்லை. கடந்த 30 ஆண்டுகளில் ஏராளமான பழங்குடியினர் வாழ்வாதாரத்தை இழந்து பல இடங்களில் கொத்தடிமைகளாக வாழ்ந்து வருகின்றனர். வன உரிமைச் சட்டத்தில் பழங்குடியினருக்காக ஏராளமான உரிமைகள் உள்ளன. அவர்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

ஈரோடு வனக் கோட்டத்தில் சரணாலயம் அமைக்கும் முன்பு கிராம சபையால் வரையறுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட சமூக வனப் பகுதி, மாவட்ட அளவிலான குழுவால் உடனடியாக அங்கீகரிக்கப்படுவதுடன் கிராம சபைக்கு உரிமை வழங்கப்பட வேண்டும். சமூக வனக் காடுகள் பரப்பை வனத் துறையின் ஆவணங்களில் முறையாக தனி வகையாகப் பதிவு செய்ய வேண்டும். இந்தப் பணிகள் முடிந்த பிறகு சரணாலய அறிவிப்பிலும் சமூக வனக் காடுகள் பரப்பு வகையை வரைபடமாகவும் இணைக்க வேண்டும்.

வன விலங்குகள் பாதுகாப்புச் சட்டம் 1972, திருத்தம் செய்யப்பட்ட சட்டம் 2006 என இரண்டு சட்டங்களில் கூறப்பட்டுள்ள எதுவும் கடைப்பிடிக்கப்படாமல், உரிமைகளை அமல்படுத்தாமல் ஈரோடு மாவட்ட வனப் பகுதிகளை வன விலங்கு சரணாலயமாக அறிவிக்கும் நடவடிக்கையை தமிழக அரசு தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும் என்றார்.

**மக்களுக்கு எந்தப் பாதிப்பும் வராது:** ஈரோடு மாவட்ட வன அலுவலர் வி.வெங்கடேஷ் பிரபு கூறியதாவது: பெரியார் வன விலங்கு சரணாலயம் குறித்து சட்டப்பேரவையில் கடந்த மார்ச் 20-ஆம் தேதி அறிவிப்பு வெளியானது. இன்னும் இதற்கான அரசாணை வெளியாகவில்லை. இந்த ஆணை வெளியான பிறகு அதில் தெரிவிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி நடைமுறைகள் தொடங்கும்.

புலிகள் சரணாலயப் பகுதிகளிலும் மக்கள் வசித்து வருகின்றனர். விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். அதுபோலத்தான் இந்த வன விலங்கு சரணாலயத்தால் மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் வராது. சரணாலயம் மூலம் வனமும், விலங்குகளும் பாதுகாக்கப்பட்டு பல்லுயிர் பெருக்கம் அதிகரிக்கும் என்றார்.

